Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

Y. M. C. A

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 03 (16-01-1993) சனிக்கிழமை ஓசை 333

**செப்ரிசீமியா நோயினால் 90 வீதமானோர் மரணம்**

யாழ். குடாநாட்டில் இன்று மிகவேகமாக பரவி வரும் 'செப்ரிசீமியா' நோயினால் பீடிக்கப்பட்டவர்களில் சுமார் 90 சதவீதமானவர்கள் மரணமடைவதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந் நோய் வைரசினால் ஏற்படுவதாகவும் இவ் வைரசு உடலிலுள்ள பிறபொருள் எதிர்ப்பு கலங்களை அழிப்பதால் பல தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைகிறது எனவும் சொல்லப்படுகிறது. இந்நோய் சிறுவர்களையே பெரிதும் (6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்படையால் கிட்டு கைது; சர்வதேச கடற்பரப்பில் சம்பவம்


## சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு (கிருஷ்ண குமார்) வங்காள விரிகுடா ஊடாக படகொன்றில் தமிழீழம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கையில் இந்தியக் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார். இந்தியக் கரையோரத்தில் இருந்து தென் கிழக்குப் பக்கமாக சுமார் 450 மைல்களுக்கு அப்பால் இச் சம்பவம், கடந்த புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றது. தற்பொழுது திரு. கிட்டுவையும், அவர் பயணம் செய்த படகையும் இந்தியக் கடற்படையினர் சென்னைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

ஐரோப்பாவில் இருந்து தென் கிழக்கு ஆசிய நாடு ஒன்றின் தலைநகருக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்த திரு. கிட்டு அங்கிருந்து படகு மூலம் யாழ்ப்பாணம்நோக்கிப் பயணமானார்.

இலங்கைக் கரையில் இருந்து கடலில் கிழக்குப் புறமாக 290 மைல் தூரத்தில் வைத்து இந்தப் படகை இந்திய கடற்படை வழிமறித்துள்ளது. இந்தியக் கடற்படையினர் தான் பயணம் செய்யும் படகில் ஏறினால் தன்னையும் படகையும் சேர்த்துத் தகர்த்து விடப் போவதாகக் கிட்டு எச்சரித்திருந்தார் என்றும், இதனைத் தொடர்ந்து ஒன்றும் செய்ய முடியாத ஒரு நிலை உருவாகியது என்றும் ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.



## சமாதானதிட்டம்பற்றி பேசவே கிட்டு யாழ். பயணமானார்

### -லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதியைக் கொண்டுவரும் நோக்கில் ஐரோப்பிய நாடுகள் சிலவும், சர்வதேச அமைப்புகள் சிலவும் முன்வைத்த யோசனைகளைக் கொண்டு தமிழீழ விடு[illegible]

தலைப்புலிகளின் தலைவரிடம் பேசவே கிட்டு சென்றார் எனப் பாரிசிலிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதி லோறன்ஸ் திலகர் கூறியுள்ளார் என பி. [illegible]

"கடலில் 450 மைல்களுக்கு அப்பால் சம்பவம் நடைபெற்றிருப்பதால் நிச்சயமாக அது ஒரு சர்வதேசக் கடல் பிராந்தியத்தில்தான் நடந்திருக்கிறது என்பது உறுதி [illegible]

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இது வரை மீட்பு நிதி செலுத்தத் தவறியவர்கள் நாளை முற்பகல் 9-30 மணி தொடக்கம் 10-00 மணிவரை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்பு நிதி செலுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

## அரசியல் தீர்வு வேண்டும் இதுவே படையினர்விருப்பம்

### -வவுனியா இராணுவ இணைப்பதிகாரி

(வவுனியா)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதே பெரும்பாலான இராணுவத்தினரின் விருப்பம் என வன்னிமாவட்ட சிறிலங்கா இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் களுபஹன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ரெலோ குழு அலுவலகம் ஒன்று திறப்பது தொடர்பாக அக் குழுவினர் இணைப்பதிகாரியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரெலோ குழு அலுவலகம் ஒன்றை வவுனியா நகரில் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க் பிரதமரின் பதவி விலகலால்

## ஐரோப்பிய நாடுகளில் பெரும் பரபரப்பு

(கொப்பஸ்ஹேகன்)

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையில் டென்மார்க் பிரதமர் பதவி விலகியதால் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஐரோப்பிய சமூகத்தின் தலைமை நாடான டென்மார்க் பிரதமர் பதவி விலகல் ஐரோப்பாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதிகளின் குடும்பத்தினர் டென்மார்க்கில் தமது குடும்பத்தினருடன் இணைய அனுமதி மறுத்ததினால் டென்மார்க் பிரதமர் போல்ஸ் லேற்றர் தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தமை தெரிந்ததே.

டென்மார்க்கில் வாழும் 130 இலங்கைத் தமிழர்களின் குடும்பங்கள் தமது குடும்பத்துடன் இணைய டென்மார்க் பிரதமர் அனுமதி மறுத்தார். இது குறித்து நீதி விசாரணை மேற்கொண்ட விசாரணைக் குழு பிரதம பாராளுமன்றத்துக்கு [6-ம் பக்கம் பார்க்க]


# சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டு(கிருஷ்ண குமார்) வங்காள விரிகுடா ஊடாக படகொன்றில் தமிழீழம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கையில் இந்தியக் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார். இந்தியக் கரையோரத்தில் இருந்து தென் கிழக்குப் பக்கமாக சுமார் 450 மைல்களுக்கு அப்பால் இச் சம்பவம், கடந்த புதன்கிழமை இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றது. தற்பொழுது திரு. கிட்டுவையும், அவர் பயணம் செய்த படகையும் இந்தியக் கடற்படையினர் சென்னைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

ஐரோப்பாவில் இருந்து தென் கிழக்கு ஆசிய நாடு ஒன்றின் தலைநகருக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்த திரு. கிட்டு அங்கிருந்து படகு மூலம் யாழ்ப்பாணம்நோக்கிப் பயணமானார்.

இலங்கைக் கரையில் இருந்து கடலில் கிழக்குப் புறமாக 290 மைல் தூரத்தில் வைத்து இந்தப் படகை இந்திய கடற்படை வழிமறித்துள்ளது இந்தியக் கடற்படையினர் தான் பயணம் செய்யும் படகில் ஏறினால் தன்னையும் படகையும் சேர்த்துத் தகர்த்து விடப் போவதாகக் கிட்டு எச்சரித்திருந்தார் என்றும், இதனைத் தொடர்ந்து ஒன்றும் செய்ய முடியாத ஒரு நிலை உருவாகியது என்றும் ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.



# அரசியல் தீர்வு வேண்டும் இதுவே படையினர்விருப்பம்

-வவுனியா இராணுவ இணைப்பதிகாரி

(வவுனியா)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதே பெரும்பாலான இராணுவத்தினரின் விருப்பம் என வன்னிமாவட்ட சிறிலங்கா இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் களுபஹன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ரெலோ குழு அலுவலகம் ஒன்று திறப்பது தொடர்பாக அக் குழுவினர் இணைப்பதிகாரியை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரெலோ குழு அலுவலகம் ஒன்றை வவுனியா நகரில் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க் பிரதமரின் பதவி விலகலால்

# ஐரோப்பிய நாடுகளில் பெரும் பரபரப்பு

(கொப்பஸ்ஹேகன்)

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையில் டென்மார்க் பிரதமர் பதவி விலகியதால் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஐரோப்பிய சமூகத்தின் தலைமை நாடான டென்மார்க் பிரதமர் பதவி விலகல் ஐரோப்பாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதிகளின் குடும்பத்தினர் டென்மார்க்கில் தமது குடும்பத்தினருடன் இணைய அனுமதி மறுத்ததினால் டென்மார்க் பிரதமர் போல்ஸ் லேற்றர் தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தமை தெரிந்ததே.

டென்மார்க்கில் வாழும் 130 இலங்கைத் தமிழர்களின் குடும்பங்கள் தமது குடும்பத்துடன் இணைய டென்மார்க் பிரதமர் அனுமதி மறுத்தார். இது குறித்து நீதி விசாரணை மேற்கொண்ட விசாரணைக் குழு பிரதம பாராளுமன்றத்துக்கு

[6-ம் பக்கம் பார்க்க]

# சமாதான திட்டம்பற்றி பேசவே கிட்டு யாழ். பயணமானார்

-லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதியைக் கொண்டுவரும் நோக்கில் ஐரோப்பிய நாடுகள் சிலவும், சர்வதேச அமைப்புகள் சிலவும் முன்வைத்த யோசனைகளைக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரிடம் பேசவே கிட்டு சென்றார் எனப் பாரிசிலிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதி லோறன்ஸ் திலகர் கூறியுள்ளார் என பி.பி.ஸி தெரிவித்தது.

"கடலில் 450 மைல்களுக்கு அப்பால் சம்பவம் நடைபெற்றிருப்பதால் நிச்சயமாக அது ஒரு சர்வதேசக் கடல் பிராந்தியத்தில்தான் நடந்திருக்கிறது என்பது உறுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறியவர்கள் நாளை முற்பகல் 9-30 மணி தொடக்கம் 10-00 மணிவரை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில மீட்பு நிதி செலுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினைத் தீர்விற்கு முட்டுக்கட்டை போடும் முயற்சி

- நெடுமாறன்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கிட்டுவை இந்திய கடற்படை வழிமறித்ததன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு சர்வதேச ரீதியில் எடுக்கப்படும் முயற்சியை இந்திய அரசு கெடுக்கப் பார்க்கின்றது. என தமிழ் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் இந்திய அரசைக் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை, இந்திய கடற்படை கிட்டுவின் படகை வழிமறித்தது தொடர்பாக இந்தியா உத்தியோகபூர்வ அறிவித்தல் ஒன்றும் நேற்று நள்ளிரவுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் புலிகளை ஒடுக்க புதிய நடவடிக்கை ஆரம்பமாம்

வந்தாறுமூலையிலிருந்து பொலநறுவை வரை புலிகளை அகற்றும நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நடவடிக்கை அப்பகுதிகளிலுள்ள காடுகளில் தொடர இருப்பதாகவும் படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்களும் உலங்குவானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

# கிட்டுவைவழிமறித்ததுகுறித்து இந்திய கடற்படை மௌனம்

இன்று அறிவிப்பு வெளியாகலாம்

சர்வதேச கடல் பரப்பில் கிட்டுவை இந்திய கடற்படை வழி மறித்துக் கொண்டு சென்றது சம்பந்தமான, தகவலை இந்திய கடற்படை ஊர்ஜிதம் செய்யவுமில்லை, மறுக்கவுமில்லை. இன்று இது குறித்து அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்ததாக சென்னை பி. பி ஸி. செய்தியாளர் சாம்ராஜப்பா தெரிவித்தார்.

சம்பவம் தற்செயலானதென்றால் கிட்டுவைத் தொடர்ந்து பிரயாணம் செய்ய அனுமதித்திருப்பார்கள் ஆனால் இதுவரை [நேற்று] எதுவும் இடம்பெறவில்லை என்று செய்தியாளர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் உருவாக்கிய சூழ்நிலை சிறிலங்கா அரசு ஆராயும்

ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சூழ்நிலை குறித்து தாம் ஆலோசனை செய்யத் தயாராக இருப்பதாக சிறிலங்கா மந்திரிசபைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். இப் புதிய சூழ்நிலை குறித்து உத்தியோகபூர்வமாக தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் பத்திரிகைகளினூடாகவே விடயத்தை தான் அறிந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். புலிகளால் இரண்டு பொலிசார் விடுவிக்கப்பட்டமை மகிழ்ச்சி தருவதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு-கிழக்கில் நிலம், நீதி என்பவற்றுடன் கூடிய சமஷ்டி அமைப்பை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும் ஆனால் இதனை சிங்களக்கட்சிகள் ஏற்றுக் கொள்ளுமா என்பதே தமது ஐயமாகும் என்றும் கொழும்பு தமிழ்க்குழு ஒன்று கூறியுள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசாங்கம் ஆக்கபூர்வமான திட்டம் ஒன்றினை முன்வைக்க வேண்டியது அவசியம் என கொழும்பு திருப்பிய ஆங்கில திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வியாழ வக்கிரம்

புத்தாண்டுப் பலன்களும், வியாழன் செவ்வாய் வக்கிரமும் எங்கும் விற்பனையாகின்றன. பாடசாலைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், கலண்டர்கள், ஆனந்த்ஸ் புத்தக நிலையம் 21/B மணிக்கூட்டு வீதி, யாழ் பாணம். கிருஷ்ணசாமி புத்தகசாலை யாழ்ப்பாணம். (4003)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு வெளிநாட்டு அழகு சாதன பொருள்களும், லேஸ். தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங், காஸ்பாக், இமிரேசன் கவரிங் நகைகள் விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாக பெற்றுக் கொள்ள. ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3954)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கபேயாரி அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5679)

### பற் சிகிச்சை நிலையம்


சென்றல் கிளினிக் (எஸ். பி. சாமி அன்கோ கட்டிட பின்புறம்) யாழ் பஸ் நிலையம் அருகில் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் பா. நே:- தினசரி: 12ந. ப - 2.00 பி ப (3249)

## நூல் நிலையம் அமைப்பு

யாழ்ப்பாணம் மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கைதடி வயோதிப இல்லம், மற்றும் கைதடி சைவச் சிறுவர் இல்லம் என்பவற்றில் ஒரு சிறிய நூல் நிலையத்தை அமைத்துக் கொடுக்கவுள்ளது மேலும் சில வயோதிப இல்லங்கள், அநாதைக் குழந்தைகளின் இல்லங்கள் என்பவற்றிற்கும் நூல்களை சுற்று முறையில் கொடுத்து மீளப் பெறவும் கழகம் ஆலோசனை செய்துள்ளது.

### பரிசோதகர்கள் குழு

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



மலர்வு:
25 11-1912
உதிர்வு:
27-01-1992

அமரர்
### வாரித்தம்பி கிருஷ்ணபிள்ளை
திதி – 16-01-1993

கிருஷ்ணபிள்ளை என்னும் சான்றோன்
எமைப் பிரிந்து நண்ணிய நாள் அன்று முதல்
நாமவரை எண்ணி நிதம் ஏங்குகிறோம் - ஈராறு மாதமாய்
இத் துயரம் தாங்காது இப்பிறப்பில்தான்.
அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய்
குடும்ப விளக்காக ஒளி தந்து
இடரகற்றிச் சிரித்து வாழப் பழக்கி
எம்மை அழவைத்து - வல்லிபுர
மாயவன் பாதங்களைப் பற்றி நின்ற
எம்குல தெய்வமே - உம் பாதந்
தொழுது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவு கூரும்.
அன்பு மனைவி மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (4008)

## சைவசித்தாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் சைவசித்தாந்த விரிவுரைத் தொடரின் மூன்றாவது அமர்வு இன்று காலை முதல் 12 மணிவரை கைலாசபதி கலை அரங்கில் இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார். பதிவுசெய்தோர் மாத்திரமின்றி ஆர்வமுள்ளோர் எவரும் பார்வையாளராக கலந்து கொள்ளலாமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா சிவச்சந்திரனின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## 3 இராணுவம் படுகாயம்

தந்திரிமலை இராணுவ முகாமின் லொறி ஒன்று மதவாச்சி புகையிரத நிலையம் அருகே தடம் புரண்டதால் இராணுவத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம் அடைந்த நிலையில் அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மேலும், பலர் சிறுகாயங்களுடன் மதவாச்சிமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

Our heartiest BLESSINGS for the FIRST ANNUAL CELEBRATION of JAFFNA MID - TOWN ROTRACT CLUB

## HARY'S INSTITUTE

Kondavil East
Kondavil

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
AND ADVANCE ENGLISH
BY
**M. A HARI**
B. A. Dip - in Eng.

(4010)

## நினைவு கூருகின்றோம்

**1993-01-16**

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சி - உருத்திரபுரம், 8 ம் வாய்க்கால் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

உக்கன் (ராஜேந்திரன் ஜெயகாந்தன் - 336, ஜெயந்தி நகர் - கிளிநொச்சி)

ரகு [சின்னத்தம்பி (காசி) இதயரூபன் - 41, இதயரூபன் வீதி, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

2-ம் லெப் பாப்பா பிலிப்ஸ் (கிருஷ்ணர் ரகுநாதன் - எரிபொருள் நிரப்பு நிலையம், காங்கேசன்துறை - யாழ்ப்பாணம்)

இதே முற்றுகையில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மூதூர், கூனித்தீவுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

பிரகாஷ் [தியாகராசா சற்குணநாதன் - 8-ம் வட்டாரம், கூனித்தீவு. மூதூர் -திருக்கோணமலை]

யாழ்ப்பாணம் - மருதனார்மடம் முகாமில் வைத்து இந்தியப் படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட - நாட்டுப் பற்றாளரான -

கனகலிங்கம் புஷ்பநாதன்-மொட்டைநாதன் (புஷ்பநாதன் வீதி, இணுவில் மேற்கு - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கம்பர்மலை, கெருடாவில் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் தடுத்து வைக்கப்பட்டுப் பின் காணாமற்போன தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மொனறாகலை ஆற்றில் எதிர் பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த -

அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் -

மேஜர் கஸ்ட்ரோ [மயில்வாகனம் ரூபானந்தராசா - பொத்துவில் - அம்பாறை]

கெனிஸ்-ஜெனிஸ் [சின்னத்தம்பி சுவேந்திரராசா- பொத்துவில் - அம்பாறை]

திருக்கோணமலை வில்கம் விகாரை முகாமைவிட்டு வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட

## ஓராண்டு நினைவஞ்சலி

### கார்த்திகேசு சின்னத்தம்பி

தரணியில்: 29 08. 1934
பரணியில்: 31. 01. 1992



திதி:- 19, 01. 1993

காலம் தான் ஓராண்டு ஆகியினும்
கணப்பொழுதும் உங்கள் பிரிவால்
துயருற்று வாடுகின்றோம் ஐயா
மைந்தனுடன் தந்தையுமாய்
மாதம் ஒன்றதனில்
மறைந்து வாராமுறைந்து முடியாது



உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (இ-5679)

## பற் சிகிச்சை நிலையம்

சென்றல் கிளினிக் (எஸ். பி. சாமி அன்கோ கட்டிட பின்புறம்) யாழ் பஸ் நிலையம் அருகில் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் பா. நே:- தினசரி: 12ந. ப - 2.00 பி ப

( 3249 )

## நூல் நிலையம் அமைப்பு

யாழ்ப்பாணம் மிட்ரவுண் றோட்டறக்ட் கழகம் தனது முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கைதடி வயோதிப இல்லம், மற்றும் கைதடி கைவச் சிறுவர் இல்லம் என்பவற்றில் ஒரு சிறிய நூல் நிலையத்தை அமைத்துக் கொடுக்கவுள்ளது மேலும் சில வயோதிப இல்லங்கள், அநாதைக் குழந்தைகளின் இல்லங்கள் என்பவற்றிற்கும் நூல்களை சுற்று முறையில் கொடுத்து மீளப் பெறவும் கழகம் ஆலோசனை செய்துள்ளது.

### பரிசோதகர்கள் குழு நியமனம்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருள்கள், ஏற்றிவரும் கப்பலில் பொருள்கள் கணக்கெடுப்பு பரிசோதகர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு கப்பலில் இருந்து செயற்பட்டு வரும்.

யாழ். மாவட்டத்திற்கு வருகின்ற உணவுப் பொருள்கள் மாயமாக மறைவதையிட்டு யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் செய்து கொண்ட புகாரையடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இக்குழுவை நியமித்துள்ளார்.

அதேவேளை பொருள்களை கப்பலில் இருந்து பாரமேற்றுக் கொள்வதற்கான பரிசோதனைக் குழுவொன்று யாழ். செயலகப் பிரிவினால் நியமிக்கப்பட்டுள்ளது இவ்விரு குழுக்களும் பொருள்களை எண்ணி, கணக்கெடுப்புவேலைகளை செய்துவரும். ஒவ்வொரு கப்பலிலும் இக்குழுக்கள் நியமிக்கபபடவுள்ளன.

குடும்ப விளக்காக ஒளி தந்து
இடரகற்றிச் சிரித்து வாழப் பழக்கி
எம்மை அழவைத்து - வல்லிபுர
மாயவன் பாதங்களைப் பற்றி நின்ற
எம்குல தெய்வமே - உம் பாதந்
தொழுது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவு கூரும்.

இராமலிங்கம் வீதி, அன்பு மனைவி மக்கள்
திருநெல்வேலி கிழக்கு, மருமக்கள்,
யாழ்ப்பாணம். (4008) பேரப்பிள்ளைகள்.

முகாமின் லொறி ஒன்று மதவாச்சி புகையிரத நிலையம் அருகே தடம் புரண்டதால் இராணுவத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம் அடைந்த நிலையில் அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பலர் சிறுகாயங்களுடன் மதவாச்சிமருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி

### கார்த்திகேசு சின்னத்தம்பி

தரணியில்: 29 0. 1934
பரணியில்: 3 , 01. 1992



திதி:- 19. 01. 1993

காலம் தான் ஓராண்டு ஆகினும்
கணப்பொழுதும் உங்கள் பிரிவால்
துயருற்று வாடுகின்றோம் ஐயா
மைந்தனுடன் தந்தையுமாய்
மாதம் ஒன்றதனில்
மறைந்த வரலாறு மறக்க முடியாது
தெய்வங்களே

- மனைவி பிள்ளைகள்
உறவினர்கள்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை ரகு
(சின்னத்தம்பி இதயரூபன்)



விடிவின் மைந்தனாய்: 22. 12. 1964
விண்ணின் மைந்தனாய்: 16. 01. 1986

ஆண்டுதான் ஐந்துடன் இரண்டாண்டு ஆகினாலும்
எங்களுடன் இரண்டறக் கலந்த செல்வமே
என்றும் உங்கள் பிரிவு பிரிக்க முடியாது ஐயா

இதயரூபன் வீதி, தாய் சகோதரர்கள்,
41 ஜெயந்தி நகர், உறவினர்கள்.
கிளிநொச்சி.

(சி/5788)

உக்கன் (ராஜேந்திரன் ஜெயகாந்தன் - 336, ஜெயந்தி நகர் - கிளிநொச்சி)

ரகு [சின்னத்தம்பி (காசி) இதயரூபன் - 41, இதயரூபன் வீதி, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

2-ம் லெப் பாப்பா பிலிப்ஸ் (கிருஷ்ணர் ரகுநாதன் - எரிபொருள் நிரப்பு நிலையம், காங்கேசன்துறை - யாழ்ப்பாணம்)

இதே மூன்றுமையில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு திருக்கோணமலை - மூதூர், கூனித்தீவுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

பிரகாஷ் [தியாகராசா சற்குணநாதன் - 8-ம் வட்டாரம், கூனித்தீவு, மூதூர் - திருக்கோணமலை]

யாழ்ப்பாணம் - மருதனார்மடம் முகாமில் வைத்து இந்தியப் படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட - நாட்டுப் பற்றாளரான -

கனகலிங்கம் புஷ்பநாதன் - மொட்டைநாதன் (புஷ்பநாதன் வீதி, இணுவில் மேற்கு - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கம்பர்மலை, கெருடாவில் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் தடுத்து வைக்கப்பட்டுப் பின் காணாமற்போன தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மொனறாகலை ஆற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த -

அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் -

மேஜர் கஸ்ட்ரோ [மயில்வாகனம் ரூபானந்தராசா - பொத்துவில் - அம்பாறை]

கெனிஸ் - ஜெனிஸ் [சின்னத்தம்பி சுவேந்திரராசா - பொத்துவில் - அம்பாறை]

திருக்கோணமலை வில்கம் விகாரை முகாமைவிட்டு வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

பைரவன் [சி. பாஸ்கரன் - அலஸ்தோட்டம் - திருக்கோணமலை]

மாயவன் [நாகரத்தினம் புனிதராசா - 2-ம் வட்டாரம், குச்சவெளி, மூதூர் - திருக்கோணமலை]

சாலமன் [மயில்வாகனம் இராசலிங்கம் - இரணைக்கேணி, குச்சவெளி, மூதூர் - திருக்கோணமலை]

திருக்கோணமலை - யான்ஓயாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

நகுலேஸ் [தர்மலிங்கம் கண்ணன் திருக்கடலூர் - திருக்கோணமலை]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த 2 இளைஞர்கள். மாவடி வேம்பைச் சேர்ந்த ஒருவர் ஆகிய 3 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5786]

# புலிகள் பலமான நிலையில் இருந்தே பேச வேண்டும்

## தென்னிந்திய திருச்சபை ஆயர் அம்பலவாணர்

(யாழ்ப்பாணம்)

"நாம் கடந்த காலத்திலே எத்தனையோ தடவைகள் அரசியல் ரீதியாக ஏமாற்றப்பட்டுள்ளோம். இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்றமடைவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் இதற்காக சிறிலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்தும் போது எந்தவித விட்டுக்கொடுப்புகளும் அற்ற விதத்திலும் ஒரு பலமான நிலையில் இருந்து கொண்டு நிபந்தனையற்ற வகையில் பேச்சுவார்த்தை நடாத்துவதையே நாம் விரும்புகின்றோம்." இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் ஆயர் ஆண்டகை அதி வண. அம்பலவாணர் தெரிவித்தார்

யாழ். வை. எம் சி.ஏ. மண்டபத்தில் அங்கலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ கலந்து கொண்ட இராப்போசன விருந்து வைபவத்துக்குச் சற்று முன்னர் எமது நிருபருடன் உரையாடிய போதே ஆண்டகை அம்பலவாணர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; சமாதானம் ஏற்படுவதை நாம் வரவேற்கிறோம் அதற்காக விடுதலைப் புலிகளின் பலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார். சிறிய நாடுகளில்ஒன்றாகிய இலங்கை அளவுக்கதிகமாக ஆயுதப் படைகளை அதிகரிக்க முடியாது. இவ்வாறான அதிகரிப்பு அரசியலில் இராணுவத் தலையீட்டுக்கு வழிவகுக்கும். இது நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும். இன்று சிறிலங்காவிலும் இவ்வாறான நிலை தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகளை உணரக் கூடியதாக உள்ளது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

### இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள

## சொந்த இடங்களுக்குதிரும்ப அகதிகளுக்குத் தடை

(வவுனியா)

இந்தியாவிலிருந்து திரும்பி வந்துள்ள அகதி மக்களை, இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதில் இழுபறி நிலை நீடிப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி அகதிகளை இராணுவம் அற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் வவுனியா நகரில் தங்கியுள்ள அகதி மக்களை, அவர்களின் விருப்பத்தின்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இராணுவம் அற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் முன்வரவில்லை.

வழமை போலவே அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை மீறி தமது சொந்த இடங்களாக உள்ள இராணுவம் அற்றபகுதிகளுக்கு விரும்பிச் செல்லமுனையும் அகதி மக்களுக்கு அரசாங்கத்தின் உதவி மறுக்கப்படுகிறது.

தற்போது வவுனியா நகரில் உள்ள மூன்று பாரிய அகதி முகாம்களிலும் அகதி மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# பாக்கு நீரிணையில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை பாக்கு நீரிணையில் அதன் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளது. தென் இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து புலிகள் ஆயுதம் மற்றும் எரிபொருள் கடத்துவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

புலிகள் தென் இந்தியாவிலிருந்து பயங்கர ஆயுதங்கள், டீசல் ஆகியவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கடத்துவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கடற்படையும் பாக்கு நீரிணையில் ரோந்து நடவடிக்கையைப் பலப்படுத்தியுள்ளது என்று சிறிலங்கா கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# உடுகம்பொல வெளியேற அமைச்சர் நிதிவழங்கினார்

[கொழும்பு]

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உடுகம்பொலவை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு முக்கிய அமைச்சர் ஒருவர் இரண்டு லட்சம் அமெரிக்க டாலர்களைக் கொடுத்துள்ளார் என்ற தகவலை ராவய வெளியிட்டுள்ளது. கறுப்புப் பூனைகளின் அரசியல் சூழ்ச்சிகளை பிரேமதாசா உடுகம்பொல வெளியிட்டு வந்தது தெரிந்ததே.

இன்று கறுப்பு பூனை அரசியலுடன் தொடர்புடைய அமைச்சர் ஒருவரே இந்தக் கொடுப்பனவைச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை கறுப்புப் பூனைகள் தொடர்பாக, ஒரு நூலை உடுகம்பொல எழுதி முடித்திருப்பதாகவும், உடுகம்பொலவின் வீட்டிலிருந்து நீதிமன்ற அனுமதியின்றி பொருள்கள் அகற்றப்படுவதாகவும், புதுப்பிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது

# ஐ. தே. க. வேட்பாளராக

# 3000 பரல் மண்ணெய் வரும்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்திற்கு இரண்டு கப்பல்களில் மூவாயிரம் பரல் மண்ணெண்ணெய் அடுத்த வாரமளவில் வரவுள்ளன.

யாழ். செயலகத்திற்கு இரண்டாயிரம் பரல் மண்ணெண்ணெயும், கெயர் நிறுவனத்திற்கு ஆயிரம் பரல்மண்ணெண்ணெயும் எடுத்து வரப்படும். [யோ]

# பழுதடைந்த மா விற்பனை

(வடமராட்சி)

காங்கேசன்துறை துறைமுகத்தில் தேங்கிக்கிடந்து 'மரினா' கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட பழுதடைந்த மா தற்பொழுது சில விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகின்றன

குடும்ப பதிவு அட்டை ஒன்றுக்கு பத்துக் கிலோ மா பதின்மூன்று ரூபாவீதம் விற்பனை செய்யப்படுகிறது. (யோ)

# சிரமதானம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவில் நிலைய விளையாட்டு மைதானம் நிலைய அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் நிலையத் தலைவர் திரு. டீ. பீ. இமானுவேல் தலைமையில் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட உள்ளது.

இச்சிரமதானப்பணியில் சகல நிலைய உறுப்பினர்களையும் தவறாது பங்குபற்றித் தொண்டு புரியுமாறு நிலையச்செயலாளர் திரு. நா. பதிமராசா வேண்டுகோள்விடுத்துள்ளார். (24)

# நிர்வாகிகள் தெரிவு

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் 1993ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

நிலையத்தின் காப்பாளராக ச. பன்னீர்ச்செல்வமும் தலைவராக த. சத்தியசீலனும் உபதலைவராக நா. இரத்தினமும் செயலாளராக செ. பிரசாத்தும் உப செயலாளராக க. நந்தகுமாரும் பொருளாளராக பொ. ஜனகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவற்றைவிட விளையாட்டுத் துறைக்கு தெ. பகீரதனும் சமயத்துறைக்கு நா. கோபாலபிள்ளையும் கலை

# விழுதுகள் எழுதுபவர்கள் கவனத்திற்கு

வெள்ளி மஞ்சரியில் பிரசுரிப்பதற்கென விழுதுகள் அனுப்பி வைக்கும் போராளிகள் அத்துடன் தமது பெயர், இல., மாவட்டம் என்பனவற்றையும் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புவதோடு. பிரசுரத்திற்கான விடயத்தை தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்பி வைக்குமாறு (தட்டச்சில் பொறித்தல் விரும்பத்தக்கது) கேட்டுக் கொள்கின்றோம்.

# யுத்த முனைகளுக்கு பாக். டாக்டர்கள்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து பத்து டாக்டர்கள் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தனர். பிரேமதாசாவின் அழைப்பையேற்று கொழும்பு வந்துள்ள இவர்கள் வடக்கு, கிழக்குமாகாணங்களின் யுத்த முனைகளில் காயமடையும் இராணுவத்தினருக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுரம், வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இந்தப் பத்துப் பேரில் ஐந்து அறுவைச் சிகிச்சை நிபுணர்களும். ஐந்து மயக்கமருந்து நிபுணர்களும் இடம் பெற்றுள்ளனர்.

# பிரேமதாசா அரசாங்கம் பத்திரிகைகள்மீது அழுத்தம்

ஐலண்ட், திவயின, சண்டே டைம்ஸ், லங்காதீப போன்ற பத்திரிகைகளில் பிரேமதாசா அரசாங்கத்திற்கு சார்பான செய்திகளையே வெளியிடுமாறு நிர்ப்பந்தங்கள் போடப்பட்டு வருவதாக யுக்திய செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஒன்று வருவதற்கு கட்டியம் கூறுவதாக பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடுவதுஇதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து பத்திரிகை நிறுவனத்தில் கடமை புரியும் பலர் பீதி அடைந்திருப்பதாகவும், தேர்தல் காலம் நெருங்க நெருங்க மேலும் கெடுபிடிகள் அதிகரிக்கலாம் எனவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஏடான யுக்திய கூறியுள்ளது'

# பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையோர் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களை தயாரித்து 30 01 93 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ தலைவர், பச்சிலைப்பள்ளி - ப. நோ. கூ. சங்கம் பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் பதவி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறியீட்டு இலக்கம் - 101/7

சம்பளத்திட்ட இலக்கம் 9 - 1105 - 60x4 - 75X11 - 2170 அத்துடன் கூட்டுறவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும்.

வயது:- 25 — 45 கூட்டுறவு பணியாளர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் இவ் வயதெல்லை பொருந்தாது.

கல்வித் தகைமைகள்:-

(1) கூட்டுறவு பயிற்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்க

நிலை நீடிப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி அகதியக்களை இராணுவம் அற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் வவுனியா நகரில் தங்கியுள்ள அகதி மக்களை, அவர்களின் விருப்பத்தின்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, களின் அறிவுறுத்தல்களை மீறி தமது சொந்த இடங்களாக உள்ள இராணுவம் அற்றபகுதிகளுக்கு விரும்பிச் செல்லமுனையும் அகதி மக்களுக்கு அரசாங்கத்தின் உதவி மறுக்கப்படுகிறது.

தற்போது வவுனியா நகரில் உள்ள மூன்று பாரிய அகதி முகாம்களிலும் அகதி மக்கள் நிறைந்து காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அளவுக்கதிகமாக ஆயுதப் படைகளை அதிகரிக்க முடியாது. இவ்வாறான அதிகரிப்பு அரசியலில் இராணுவத் தலையீட்டுக்கு வழிவகுக்கும். இது நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும். இன்று சிறிலங்காவிலும் இவ்வாறான நிலை தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகளை உணரக் கூடியதாக உள்ளது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

அளிப்பதற்காக அநுராதபுரம், ...வனர்.

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவில் நிலைய விளையாட்டு மைதானம் நிலைய அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் நிலையத் தலைவர் திரு. டீ. பீ. இமானுவேல் தலைமையில் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட உள்ளது.

இச்சிரமதானப்பணியில் சகல நிலைய உறுப்பினர்களையும் தவறாது பங்குபற்றித் தொண்டு புரியுமாறு நிலையச்செயலாளர் திரு. நா. பதுமராசா வேண்டுகோள்விடுத்துள்ளார். (24)

## பிரேமதாசா அரசாங்கம் பத்திரிகைகள்மீது அழுத்தம்

ஐலண்ட், திவயின, சண்டே டைம்ஸ், லங்காதீப போன்ற பத்திரிகைகளில் பிரேமதாசா அரசாங்கத்திற்கு சார்பான செய்திகளையே வெளியிடுமாறு நிர்ப்பந்தங்கள் போடப்பட்டு வருவதாக யுக்திய செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஒன்று வருவதற்கு கட்டியம் கூறுவதாக பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடுவது இதன் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த அச்சுறுத்தலைத் தொடர்ந்து பத்திரிகை நிறுவனத்தில் கடமை புரியும் பலர் பீதி அடைந்திருப்பதாகவும், தேர்தல் காலம் நெருங்க நெருங்க மேலும் கெடுபிடிகள் அதிகரிக்கலாம் எனவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஏடான யுக்திய கூறியுள்ளது.

# பாக்கு நீரிணையில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படை பாக்கு நீரிணையில் அதன் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளது. தென் இந்தியக் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து புலிகள் ஆயுதம் மற்றும் எரிபொருள் கடத்துவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

புலிகள் தென் இந்தியாவிலிருந்து பயங்கர ஆயுதங்கள், டீசல் ஆகியவற்றை யாழ்ப்பாணத்துக்குக் கடத்துவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கடற்படையும் பாக்கு நீரிணையில் ரோந்து நடவடிக்கையைப் பலப்படுத்தியுள்ளது என்று சிறிலங்கா கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## உடுகம்பொல வெளியேற அமைச்சர் நிதிவழங்கினார்

[கொழும்பு]

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உடுகம்பொலவை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு முக்கிய அமைச்சர் ஒருவர் இரண்டு லட்சம் அமெரிக்க டாலர்களைக் கொடுத்துள்ளார் என்ற தகவலை ராவய வெளியிட்டுள்ளது. கறுப்புப் பூனைகளின் அரசியல் சூழ்ச்சிகளை பிரேமதாசா உடுகம்பொல வெளியிட்டு வந்தது தெரிந்ததே.

இன்று கறுப்பு பூனை அரசியலுடன் தொடர்புடைய அமைச்சர் ஒருவரே இந்தக் கொடுப்பனவைச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதே வேளை கறுப்புப் பூனைகள் தொடர்பாக, ஒரு நூலை உடுகம்பொல எழுதி முடித்திருப்பதாகவும், உடுகம்பொலவின் வீட்டிலிருந்து நீதிமன்ற அனுமதியின்றி பொருள்கள் அகற்றப்படுவதாகவும், புதுப்பிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## ஐ. தே. க. வேட்பாளராக ஒஸி போட்டியிடுவார்

(கொழும்பு)

சிறிலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டு வந்தவரும், மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஒஸி அபய குணசேகரா அடுத்து வரும் பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

இந்த நடவடிக்கையானது கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவரும், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் பலத்தை கம்பஹா மாவட்டத்தில் குறைப்பதற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மேற்கொண்ட சதி முயற்சி என்றே கருதப்படுகிறது.

இதேவேளை களனி தேர்தல் தொகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படும் பலர் விலக்கப்பட்டு அவ் இடங்களில் ஒஸி அபய குணசேகராவின் ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

## வங்கியிடம் நஷ்டஈடு கோரும் பிரதி சபாநாயகர்

தன்னுடைய வங்கிக்கணக்கு வழக்குகளை 'ராவய' பத்திரிகை வெளியிட்டது தொடர்பாக பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா மக்கள் வங்கியிடம் முப்பதுகோடி ரூபாவை நட்ட ஈடாகக்கோரியுள்ளார்.

1983ஆம் ஆண்டு தொடக்கம் திஸ்ஸமகாராம மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்பதாகவும், இப்படியான கணக்குகளை வங்கி வெளியிட்டது பற்றி தான் வருந்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நட்ட ஈட்டுக் கோரிக்கையால் மக்கள் வங்கி பாரிய ஒருநிதி நெருக்கடிக்கும், பொருளாதாரப் பின்னடைவுக்கும் உள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

## கவிதை ஆய்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தத்துவத்துறை மண்டபத்தில் இளவுணர்வுக் கவிதைகளும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் என்னும் தலைப்பில் கவிஞர்கள் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியவர்களின் கவிதை ஆய்வு செ. க. சந்திரா வினால் எடுத்துரைக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகதமிழ்த் துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து இன்றைய காலகட்டத்தில்தமிழர்போராட்டத்தில் தமிழ்த்துறையின் பங்கு பற்றி எடுத்துக்கூறினார்

இக் கவிதை ஆய்வுரையின் தொடர் அங்கத்தில் விடுதலைப்புலிகள் பிரமுகர் யோகரத்தினம் யோகி, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் கலாநிதி ஞானக்குமரன், அரசியல்துறை விரிவுரையாளர் திரு. ரகுநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (05)

## நிர்வாகிகள் தெரிவு

ஒட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தின் 1993ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

நிலையத்தின் காப்பாளராக ச. பன்னீர்ச்செல்வமும் தலைவராக த. சத்தியசீலனும் உபதலைவராக நா. இரத்தினமும் செயலாளராக செ. பிரசாத்தும் உப செயலாளராக க. நந்தகுமாரும் பொருளாளராக பொ. ஜனகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவற்றைவிட விளையாட்டுத் துறைக்கு தெ. பகீரதனும் சமயத்துறைக்கு நா. கோபாலபிள்ளையும் கலை பண்பாட்டுத்துறைக்கு ச. சத்தியதாசனும் சுகாதாரத் துறைக்கு எஸ். ஆர். லோகநாதனும் நூல்நிலையத்திற்கு ஐ. நாகராஜனும், மேலும் நான்கு செயற்குழு உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

★

தொண்டமானாறு விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் ஒற்றுமை விளையாட்டுக் கழகம் என்பவற்றிற்கான நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றுள்ளது இதில் தலைவராக தி. இராஜசிங்கமும், செயலாளராக ம. மயில்வாகனமும், விளையாட்டுக்கழக தலைவராக அ. கிருபாகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★

பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தின் நடப்புவருட நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் தலைவராக எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளையும், செயலாளராக அ. தோமஸும், பொருளாளராக சி. தியாகராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையோர் தாமாகவே விண்ணப்பப் பத்திரங்களை தயாரித்து 30 01 93 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்போ தலைவர், பச்சிலைப்பள்ளி - ப. நோ. கூ. சங்கம் பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறியீட்டு இலக்கம் - 101/7

சம்பளத்திட்ட இலக்கம் 9 - 1105 - 60x4 - 75X11 - 2170 அத்துடன் கூட்டுறவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும்.

வயது:- 25 — 45 கூட்டுறவு பணியாளர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் இவ் வயதெல்லை பொருந்தாது.

கல்வித் தகைமைகள்:-

(1) கூட்டுறவு பயிற்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது,

(2) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) தராதரப் பத்திரமும் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும் அல்லது,

(3) 5 வருட அனுபவத்துடன் கூடிய முன்னாள் கூட்டுறவு பரிசோதகர் அல்லது,

(4) வருடம் இருபது லட்சம் ரூபாவை விற்பனைச் சுழற்சியாக கொண்ட வியாபார நிறுவனத்தில் மேல் முகாமை பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம்.

செ. மார்க்கண்டு
தலைவர்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்
பளை
15 01 93

## ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் பாவித்து கழிக்கப்பட்ட நோமல் லொறிக்கான உதிரிப்பாகங்கள் 28-01-93 காலை 10. 10 மணிக்கு மேற்படி சங்கத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். உதிரிப்பாகங்களை பார்வையிட விரும்புவோர் வேலை நாட்களில் காலை 10. 00 மணி தொடக்கம் மாலை 3. 00 மணிவரை சங்க அலுவலகத்தில் பார்வையிடலாம்.

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்
பளை
15 01. 93

(4009)

சி. சச்சிதானந்தம்
பொதுமுகாமையாளர்

# தமிழீழத்தின் எதிர்கால விருத்திக்கு சரியான புள்ளி விபரங்கள் அவசியம்

தமிழீழத்தின் எதிர்காலம் செழுமையுடன் திகழ்வதற்கு முழுமையான உண்மைப் புள்ளிவிபரங்கள் எமக்கு அவசியமாகின்றன. சென்ற காலங்களில் சிறிலங்கா அரசினால் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்கள் முழுமையானவையாக அமையவில்லை, அத்துடன் இவ்விதமாக செய்யப்பட்ட மதிப்பீடுகளும், தொகுக்கப்பட்ட புள்ளிவிபரங்களும், தமிழீழ மக்கள் வாழும் பிரதேசங்களின் அரச அதிபர் பிரிவுகளிலுள்ள கிராம சேவையாளர் பிரிவு ரீதியான பகுதிகளை உள்ளடக்கியதாக அமையவில்லை. இவ்வாறு அரசினால் மேலோட்டமான முறையில் திரட்டப்பட்டு வந்த புள்ளிவிபரத்திரட்டுதல் கூட 1981-ம் ஆண்டின் பின் திரட்டப்படவில்லை. இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

மேலும் அச்செய்திக்குறிப்பில் இன்று தமிழீழத்தில் பலரது சொத்துடைமைகள் இனவாத அரசினால் நாசமாக்கப்பட்டுள்ளன. பலர் அங்கவீனராகியுள்ளனர், பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இன்னும் பலர் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளில் இவை பற்றிய விபரங்களை நாம் ஒவ்வொருவரும் மேலோட்டமாக, அரைகுறையாக அறிந்து வைத்திருக்கிறோமே தவிர முழுமையான தரவுகள் எம்மிடத்தில் இல்லை.

எதிர்காலத்தில் இந்நிலையைப் போக்கி தமிழீழத்தின்

## தகவல்கள் திரட்ட நடவடிக்கை

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவினதும் குடிசார் மற்றும் பாதிப்புற்றோர் புள்ளி விபரங்களைத் திரட்டுவதில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஒத்தாசையுடன் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் புள்ளி விபரக் கிளை முனைந்து செயற்பட்டு வருகிறது. இப்பணியின் முதற்கட்டமாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

திரட்டப்பட்ட புள்ளி விபரங்களினூடாக எமது வளத்தை நாமே அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக, எமது மண்ணின் மனித வளத்தை அறிந்து அதற்கேற்ப எமக்குரிய எதிர்கால வேலைத் திட்டங்களை வகுக்க முடிகிறது தொழில் ரீதியான புள்ளி விபரங்கள் மூலம் ஏற்ற தொழில் வளங்களைத் திட்டமிட முடிகிறது.

தவிர கல்வி வசதிகள், இருப்பிட வசதிகள், உணவுத் தேவைகள் போன்றவற்றைத் திட்டமிடவும் இப்புள்ளி விபரங்களே பெரிதும் உதவுகின்றன. இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் தொகையையும், அவர்களது தேவைகளையும் அறிந்து அவர்களுக்கேற்ற சுகாதார, உணவு, கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள இப்புள்ளி விபரங்கள் உதவுகின்றன.

பாதிப்புற்றோர் என்று பரவலாகப் பேசிக் கொள்ளும் போது பாதிப்பின் தன்மை முழுமையாக வெளிக்கொணரப்பட மாட்டாது. ஆனால் புள்ளி விபர மதிப்பீட்டின் பின்னர் பாதிப்புற்றோருக்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் அமையும்போது உரிய முறையில் உதவிகள் சென்றடைவதற்கு இப்புள்ளி விபரங்கள் அத்தியாவசியமாகின்றன.

ஒவ்வொரு குடும்பத்தினரதும் தொழில், வருமானம் போன்றனவும் அறியப்படுவதன் மூலம் வாழ்க்கைத்தராதரங்களில் மிகவும் பின் தங்கியோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் சில தொழில் வாய்ப்புகளை வழங்க முடிகிறது. நாம் மேற்கொள்ளும் இவ்வித முழுமையான புள்ளி விபரத்திரட்டுதல் மூலம் ஒருவர் முன்னர் செய்த தொழில், இப்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட முடியாத தொழில்கள், அதற்கான காரணங்கள் போன்ற பலவும் அறியப்படுவதனால் தமிழீழ மக்களின் இன்றைய வாழ்க்கை நிலையை உலகின் பார்வைக்கு முன் வைப்பதற்கும் இது உதவுகிறது.

ஆகவே யுத்த சூழ்நிலையின் மத்தியிலும் இவ்வாறான புள்ளிவிபரத்திரட்டுதல்களின் தேவையின் முக்கியத்துவத்தை மையமாகவைத்து ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் விபரங்களைத் திரட்டுவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் புள்ளிவிபரக்கிளை முனைந்துள்ளது இந்த நடவடிக்கையில் அடுத்ததாக சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் குடிசார், பாதிப்புற்றோர் புள்ளிவிபரங்கள் திரட்டப்படவுள்ளன.

மொத்தத்தில் யுத்தத்தினால் சொத்துடமைகளையும், உடல் உறுப்புக்களையும் சொந்த பந்தங்களையும் இழந்த நிலையிலும் தொடர்ந்து தாம் வாழமுடியும் என்ற நம்பிக்கையை மனதில் ஏற்படுத்திக் கொண்டு தமிழீழ மண்ணில் சுபீட்சமாக மக்களை வாழ வைப்பதற்கான முயற்சியின் படிகளில் ஒன்றே இப்புள்ளி விபரத்திரட்டுதல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது


## போராளிகள் நினைவுமலர்

போராளிகளின் நினைவு மலர், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை ஆவணத்திற்கு அனுப்பும்போது கீழ்காணும் புதிய முகவரிக்கு அனுப்பவும்.

ஆவணக் காப்பகம்
மே/பா மாவீரர் படிப்பகம்,
பலாலி வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(4005)



## 45-ம் நாள் நினைவஞ்சலி



| வீர ஜனனம்: | வீரச் சாவு: |
| --- | --- |
| 27 – 11 – 1965 | 02 – 12 – 1992 |

**வீரவேங்கை அமுதரசன்**
(இராசரெத்தினம் கணேசலிங்கம் (கணேசு))
புங்குடுதீவு 7-ம் வட்டாரம்



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
07 – 06 – 1952

மறைவு
16 – 01 – 1988

**நாட்டுப்பற்றாளர் மொட்டைநாதன்**
(கனகலிங்கம் புஷ்பநாதன்)

நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் உங்களின் நினைவு எம்மை விட்டுச் செல்லவில்லை 5 வருடம் என்ன ஒரு நூறு வருடங்கள் ஆனாலும் மறையப் போவதில்லை.



## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



லீலா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்
**திரு. மார்க்கண்டு தர்மலிங்கம்**

அன்னார்சிவபதமடைந்த நாளன்று எமது இல்லம் வந்துஅன்பு காட்டி, ஆறுதலும், தேறுதலும் கூறிய உற்றார், உறவினர்மற்றும்நண்பர்கள் ஆகியோருக்கு எமதுமனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

நிகழும் ஆங்கீரசு வருஷம் தை 3ஆம் நாள் (16-01-93) இன்றுசனிக்கிழமை சங்கானை அராலி வீதி இல்லத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் குடும்ப சமேதராகக் கலந்துகொண்டு அன்றைய வைபவத்தைச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் மனைவி.
அராலி வீதி, சங்கானை.
மருமக்கள்: –த. சிவசுப்பிரமணியம், த.கோவிந்தசாமி (லீலா)

(4006)

டப்படவில்லை. இவ்வாறு வைப் போக்கி தமிழீழத்தின் குரிய எதிர்கால வேலைத் திட் போது பாதிப்பின் தன்மை

## போராளிகள் நினைவுமலர்

போராளிகளின் நினைவு மலர், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை ஆவணத்திற்கு அனுப்பும்போது கீழ்க்காணும் புதிய முகவரிககு அனுப்பவும.

ஆவணக் காப்பகம்
மே/பா மாவீரர் படிப்பகம்,
பலாலி வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

(4005)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்: 27 – 11 – 1965



வீரச் சாவு: 02 – 12 – 1992

### வீரவேங்கை அமுதரசன்

[இராசரெத்தினம் கணேசலிங்கம் (கணேசு)]
புங்குடுதீவு 7-ம் வட்டாரம்

மாவீரனே அமுதரசன்!
மங்காத ரெத்தினமே!
ஆண்பிள்ளை இல்லை என்று
தவித்திருக்கும் வேளையிலே
தவம் இருந்து பெற்றெடுத்தேன்
ஐந்தாவது புத்திரனாய்
கணேச (லிங்கம்) என்ற நாமத்தை
உனக்கு நான் சூட்டி வைத்தேன்
நீ வளர்ந்து மரமாகி
நிழல் தரும் வேளையிலே
மண் மீட்க புறப்பட்ட
வரிப்புலி கூட்டத்திலே
வீரம் கொண்ட வேங்கையாய்
நீ இணைந்தாய் அவர்களுடன்
உதிரங்கள் உறைய வைக்கும்
எதிரியவன் களத்தினிலே!
எதிர் கொண்டு தகர்த்தெறிந்து
சாதனைகள் படைத்து விட்ட
மாவீரர் வரிசையிலே
உன் பெயரும் அடங்குதடா

16. 01. 93 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் வீடுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

200, கண்டி றோட்,
அரியாலை.
(3997)

தந்தை, தாய்,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 – 06 – 1952

மறைவு: 16 – 01 – 1988

### நாட்டுப்பற்றாளர் மொட்டைநாதன்

(கனகலிங்கம் புஷ்பநாதன்)

நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் உங்களின் நினைவு எம்மை விட்டுச் செல்லவில்லை 5 வருடம் என்ன ஒரு நூறு வருடங்கள் ஆனாலும் மறையப் போவதில்லை.

உங்களை நினைவு கூரும்
அன்பான
அம்மா, தங்கைகள், மைத்துனர்,
மைத்துனி, தம்பிமார் மகள், மருமகன்

இணுவில் மேற்கு.
(3994)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை சாலமன்

(மயில்வாகனம் இராசலிங்கம்)

வீரஜனனம்: 23.03.1969

வீரச்சாவு: 16-01-1991

திருமலை மண்ணில் பூத்திட்ட புலிமானே
இரணைக்கேணியில் செழிப்புற்ற சிறுத்தையே
இளைவிட்டு வளர்ந்தீரே வி கம் விகாரைக்களத்தில்
உயிர்நீத்த வீரவேங்கையே தாய் ஒருத்தி
வயிற்றினிலே துளிர்த்து விட்ட இளம்புலி சாலமனே
நிலை குலையாத கொள்கை கொண்ட
எம் தலைவரின் வழியிலே தமிழ் மண்ணை
மீட்டிடவே தந்தீரே உம் உயிரை மண்ணுக்கு
உரமான மாவீரர் நீர் வாழ்க!

— உன்னை நினைவு கூரும்
அம்மா, அண்ணன்மார், அண்ணிமார்,
தங்கைமார்.

இரணைக்கேணி குச்சவெளி
திருகோணமலை
(3996)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



லீலா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்

### திரு. மார்க்கண்டு தர்மலிங்கம்

அன்னார்சிவபதமடைந்த நாளன்று எமது இல்லம் வந்துஅன்பு காட்டி, ஆறுதலும், தேறுதலும் கூறிய உற்றார், உறவினர்மற்றும்நண்பர்கள் ஆகியோருக்கு எமதுமனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

நிகழும் ஆங்கீரசு வருஷம் தை 3ஆம் நாள் (16-01-93) இன்றுசனிக்கிழமை சங்கானை அராலி வீதி இல்லத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் குடும்ப சமேதராகக் கலந்துகொண்டு அன்றைய வைபவத்தைச் சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம் மனைவி.

அராலி வீதி,
சங்கானை.

மருமக்கள்: –த. சிவசுப்பிரமணியம்,
த.கோவிந்தசாமி (லீலா)

(4006)

## 31வது நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 29 – 01 – 1929



மறைவு: 17 – 12 – 1992

### நாகலிங்கம் சொக்கலிங்கம்

வேலணை மேற்கு

தூக்கமென துயிலுமுன்னே தூர இருக்கும்
- எம்மை - துல்லியமாய் வரைந்து விட்டு
மீளாத்துயில் எடுத்தீர்களே!

உங்கள் பிரிவால் துயருறும்
அண்ணன், மைத்துனி,
மருமகன் மகள்
பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(சி-5785)

## சிந்தனைக்கு

உள்ளம் கோணலாக இருந்தால்
தலை சிராக இருந்தும் பயனில்லை
— எட்வேர்ட் யங்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாண · 16-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2389 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# இனவெறிக்கு ஒரு விளம்பரம்

"முன்னே செல்லும் உங்கள் கால்கள் இரத்தம் தோய்ந்தால் தான்பின்னே வரும் உங்கள்கால்கள் சுதந்திரமாக நடமாடமுடியும்" இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக அரசாங்கத்தினால் விளம்பரக் கொம்பனி ஒன்றின் மூலம் செய்யப்பட்ட விளம் பரங்களில் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 'தினமின' - டெய்லிநியூஸ், தினகரன் ஆகியவற்றின் சகோதரப் பத்திரிகை - பத்திரிகையில் அரைப் பக்கம் அளவில், பல வர்ணத்தில் இவ்விளம்பரம் அச்சாகியுள்ளது. இவ்விளம்பரத்தில் சற்று முன் பின்னாக இரு இராணுவச் சப்பாத்துக்கள் காணப்படுகின்றன. இச்சப்பாத்துக்களின் முன் கால் பகுதி இரத்தம் தோய்ந்தது போன்று சிவப்பு வர்ணத்தில் காணப்படுகின்றது. இவ் விளம்பரத்தைப் போன்று மேலும் பல விளம்பரங்களை தொடர்ந்து பல நாட்கள் அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் அரசாங்கம் பல பகீரத முயற்சிகளை செய்து வருகின்றது. இராணுவத்திற்குரிய கல்வித் தகைமையைக் குறைத்தது. கவரக் கூடிய வகையில் சம்பளங்களையும், சலுகைகளையும் தொடர்ந்து அதிகரித்தது. தற்பொழுது கவர்ச்சியூட்டும் விளம்பரங்களை வெளியிடத் தொடங்கியுள்ளது.

கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது ஒருபுறம் இருக்கட்டும், செய்யப்படும் விளம்பரங்களின் தன்மையே ஆதிக்க வெறியையும், இனவாதத்தையும் அப்பட்டமாகக் காட்டுபவையாக உள்ளதே இங்கு தமிழ்மக்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

இராணுவச் சப்பாத்துக்கள் பொதுவாகவே அடக்குமுறையின் சின்னமாகவே குறிப்பிடப்படுபவையாகும். சிங்கள கேலிச் சித்திரக்காரரும் சரி, ஒடுக்குமுறைக்கு எதிராககுரல் கொடுப்பவர்களும் சரி இக்குறியீட்டைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசிற்கு இது புரியாத ஒன்றும் அல்ல. இந்நிலையில், இராணுவத்தின் ஆட்சேர்ப்பிற்கு இராணுவச் சப்பாத்துக்களை அரசு தெரிவு செய்வது

# வடபகுதிக்கு உணவு அனுப்புவதில் கோடிக்கணக்கில் மோசடி

### –உயர் அதிகாரிகள் இரகசியப் பொலிஸ் விசாரணையில்

(கொழும்பு)

வடபகுதிக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதில் கோடிக்கணக்கான ரூபா மோசடி செய்யப்பட்டதன் பின்னணியில் அரசாங்க உயர் அதிகாரிகள் பலரும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதனையடுத்து சில உயர் அதிகாரிகள் மீது இரகசியப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் உணவுப் பொருள்கள் வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யப்பட்டிருப்பது இரகசியப் பொலிசாருக்கு தெரிய வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை கொழும்பில் இருந்து வடபகுதிக்கு அனுப்பப்பட்ட அறுபது லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கிடைக்கவில்லையென யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தமுறைப்பாட்டை தொடர்ந்தே விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டதாகவும், பல கோடிக்கணக்கான ரூபாவிற்கு மோசடி செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த மோசடிகள் தொடர்பாக உயர் அதிகாரிகள் இருபது பேரின் ஆவணங்கள் பரிசிலனை செய்யப்பட்டு வருவதாக இரகசிய பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

நீண்ட காலமாக நடைபெற்று வந்துள்ள இந்த மோசடியில் அரசாங்க உயர் அதிகாரிகள் பின்னணியில் இருந்திருப்பது தெரிய வந்திருப்பதாகக் கூறியுள்ள புனர்வாழ்வு புனருத்தாரண சமூக சேவைகள் அமைச்சர் பீ. தயாரத்தின விசாரணை முடியும் வரை மேலதிக தகவல்கள் வெளியிடப்பட முடியாது எனவும் லங்காதீப பத்திரிகைக்கு கூறியுள்ளார்.

## ஆங்கில ஆசிரியர் தெரிவு

### பரீட்சை முடிவுகள் வரவில்லை

ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்காக நடத்தப்பட்ட விசேட பரீட்சையின் பெறுபேறுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இதனால் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் பலரும் பெரும் கவலை கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இப்பரீட்சை கடந்த வருடம் ஆகஸ்ட் 26-ம் திகதி நடத்தப்பட்டது என்பதும், இப்பரீட்சைக்குப் பின்னர், நடத்தப்பட்ட கிராமசேவையாளர் பரீட்சையின் முடிவுகளும் இதற்கு முன்னர் நடந்த ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளும், வெளியிடப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## தாயுமானவர் நினைவுரை

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறுகின்ற சைவசித்தாந்த விளக்க நிகழ்ச்சிகளோடு தாயுமானவர் சுவாமிகள் நினைவும் கொண்டாடப்படவுள்ளது. மூதறிஞர் க. சி. குலரத்தினம் சித்தாந்த மணி மு. திருஞான சம்பந்த பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

## வருடாந்த திருவிழா

பலாலி புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த விழா இம்முறை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனையுடன் ஆரம்பமாகும். இவ்விழா தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நீடித்து 20ம்திகதி புதன்கிழமைகாலை 6.30 மணிக்கு பாடல் பூசையுடன் நிறைவு பெறும். பலாலி புனித செபஸ்தியார் ஆலயப் பங்கை சேர்ந்த மக்கள் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெயர்ந்திருப்பது தெரிந்ததே

# கைதிகளின் விடுதலைக்கு நீதிமன்ற நடவடிக்கை

### –முன்னாள் நீதிபதி ஜே. எச். ஏ. சூசா

தடுப்பு காவலில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 250 பேரின் விடுதலை தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் நீதிபதி ஜே. எச். ஏ. சூசா தெரிவித்துள்ளார்.

இவர்கள் பலவத்த, பூஸா, வீரவில, களுத்துறை ஆகிய தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்ப தாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 70,000 தமிழர் அகதிகளாகினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 16913 குடும்பங்களைச்சேர்ந்த 69 467 பேர் அகதிகளாக வாழ்வதாகமாவட்டச் செயலகத்தின் நிலைபர அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இதில் 1832 குடும்பங்களைச் சேர்ந்த 7315 பேர் அகதிமுகாம்களிலும் 15081 குடும்பங்களைச் சேர்ந்த 62,152 பேர் இடம்பெயர்ந்து நண்பர், உறவினர்வீடுகளிலும்தங்கியுள்ளனர்

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 13 அகதிமுகாம்கள் உள்ளன. இதில் 1058 குடும்பங்களைச் சேர்ந்த 3983 பேர் தங்கியுள்ளனர்.

# கூட்டுறவு சங்க விறகுகாலையில் 1,40,000 ரூபா கையாடல்

(குருநகர்)

யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விறகுகாலையில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா கையாடல் நடைபெற்றிருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சந்தேகத்தின் பேரில் முகாமையாளரிடம் விசாரிக்கப்பட்டபோது அவர் தனக்கும் அப்பாற் பட்ட விளைவு அது என்று தெரிவித்ததாகவும் விற்பனையாளர் தரத்தை உடைய மேற்படி நபருக்கு முகாமையாளர் பதவி வழங்கப் பட்டிருந்தது சம்பவத்தின் பின்பாகவே தெரிய வந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

விறகு காலையில் எஞ்சி இருக்கும் பொருள்கள் கையிருப்பு எடுக்கையிலேயே மேற்படிகையாடல் தெரிய வந்தது யாழ். பல நோ. கூட்டுறவுச் சங்க தலைவர் தலைமையிலான குழு விசாரணையை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (21)

# சிங்களமும், பௌத்தமும் இல்லாமற் போகும் ஆபத்து

### -கல்திஸ்ஸ தர்மபாலராமவிகாராதிபதி கவலை

சிங்களமும், பௌத்தமும் இல்லாமல் போகும் ஒரு யுகத்தில் வாழுகின்றோம். எனவே சிங்களத்தையும், பௌத்தத்தையும் உடனடியாக காப்பாற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு கல்திஸ்ஸ தர்மபாலராம விகாராதிபதி கோடுகொட தம்மாவன்ச தேரோ பேராதனை பஞ்சாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நடைபெறும் மாற்றங்களினால் சிங்களவர்கள் பலிக்கடாக்களாக மாறும் நிலை உருவாகியுள்ளது. விசேடமாக பௌத்த விகாரைகளை நாசம் செய்யப்படுவதற்கும் பௌத்த மதத்தை சீர்குலைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

## க.பொ.த.(உயர்தரம்] புள்ளிகள் விரைவில்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த.(உயர் தரம்)பரீட்சையின் பெறுபேறுகளுக்குரிய புள்ளிகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் கூறியுள்ளது.

# ராஜீவ் சிலை திறப்புக்கு அ. தி. மு. க. முட்டுக்கட்டை

### காங்கிரஸ் குற்றச்சாட்டு

(சென்னை)

முகர்களும் விடுத்திருக்கும் ... யே முதல்வர் ஜெயலலிதா

சுதந்திரமாக நடமாடமுடியும்'' இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக அரசாங்கத்தினால் விளம்பரக் கொம்பனி ஒன்றின் மூலம் செய்யப்பட்ட விளம் பரங்களில் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 'தினமின' - டெய்லிநியூஸ், தினகரன் ஆகியவற்றின் சகோதரப் பத்திரிகை - பத்திரிகையில் அரைப் பக்கம் அளவில், பல வர்ணத்தில் இவ்விளம்பரம் அச்சாகியுள்ளது. இவ்விளம்பரத்தில் சற்று முன் பின்னாக இரு இராணுவச் சப்பாத்துக்கள் காணப்படுகின்றன. இச்சப்பாத்துக்களின் முன் கால் பகுதி இரத்தம் தோய்ந்தது போன்று சிவப்பு வர்ணத்தில் காணப்படுகின்றது. இவ்விளம்பரத்தைப் போன்று மேலும் பல விளம்பரங்களை தொடர்ந்து பல நாட்கள் அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் அரசாங்கம் பல பகீரத முயற்சிகளை செய்து வருகின்றது. இராணுவத்திற்குரிய கல்வித் தகைமையைக் குறைத்தது. கவரக் கூடிய வகையில் சம்பளங்களையும், சலுகைகளையும் தொடர்ந்து அதிகரித்தது. தற்பொழுது கவர்ச்சியூட்டும் விளம்பரங்களை வெளியிடத் தொடங்கியுள்ளது.

கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பது ஒருபுறம் இருக்கட்டும், செய்யப்படும் விளம்பரங்களின் தன்மையே ஆதிக்க வெறியையும், இனவாதத்தையும் அப்பட்டமாகக் காட்டுபவையாக உள்ளதே இங்கு தமிழ்மக்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

இராணுவச் சப்பாத்துக்கள் பொதுவாகவே அடக்குமுறையின் சின்னமாகவே குறிப்பிடப்படுபவையாகும். சிங்கள கேலிச் சித்திரக்காரரும் சரி, ஒடுக்கு முறைக்கு எதிராககுரல் கொடுப்பவர்களும் சரி இக்குறியீட்டைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசிற்கு இது புரியாத ஒன்றும் அல்ல. இந்நிலையில், இராணுவத்தின் ஆட்சேர்ப்பிற்கு இராணுவச் சப்பாத்துக்களை அரசு தெரிவு செய்வது என்பது 'அரசாங்கத்தின் அப்பட்டமான அடக்குமுறைச் சிந்தனையையே வெளிக்காட்டுவதாகும். தமிழருக்கு எதிரான அடக்கு முறைக்கு அணிதிரளுங்கள் என்பதே இவ்விளம்பரம் மூலம் அரசாங்கத்தின் குரலாக ஒலிக்கிறது இதேவேளை, விளம்பரத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்கள் இனப் படுகொலையையும், ஆக்கிரமிப்பையும் வலியுறுத்துவதாகவே உள்ளது.

அதாவது தமிழர்களை சிங்கள இராணுவத்தின் சப்பாத்துக்களினால் நசுக்கி அதன்மூலம் இரத்தம் தோய்ந்த சப்பாத்துக்களினால், அமைதியாக உலாவர சிங்கள அரசு விரும்புகின்றது என்பதையே இது காட்டுகின்றது. அதாவது இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் போது, அதன் அடக்குமுறைத் தத்துவமும், ஆக்கிரமிப்பு நோக்கமும் விளம்பரம் மூலமே இராணுவத்திற்கு ஊட்டப்படுகின்றது. அதாவது இனவெறி தூண்டப்படுகின்றது.

இந்நிலையில் சிறிலங்கா இராணுவம் புரியும் படுகொலைகளுக்கும் தனது சப்பாத்துக்களை இரத்தத்தில் தோய்த்துக் கொள்வதற்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பேற்க வேண்டும். இதே வேளை சிறிலங்கா அரசாங்கம் இன அழிப்பிலும், ஆக்கிரமிப்பிலும் எத்துணை அக்கறையாகவுள்ளதென்பதையும், இதைத் தடுத்து நிறுத்த தமிழர்கள் எவ்வின்னல் வரினும் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

---

பர்தெரிவித்தமுறைப்பாட்டை

இன்றது. இப்பரீட்சை கடந்த

## அகதிகளின் விடுதலைக்கு நீதிமன்ற நடவடிக்கை

### -முன்னாள் நீதிபதி ஜே. எச். ஏ. சூசா

தடுப்பு காவலில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 250 பேரின் விடுதலை தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் நீதிபதி ஜே. எச். ஏ. சூசா தெரிவித்துள்ளார்.

இவர்கள் பலவத்த, பூஸா, வீரவில, களுத்துறை ஆகிய தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டுறவு சங்க விறகுகாலையில் 1,40,000 ரூபா கையாடல்

(குருநகர்)

யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விறகுகாலையில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா கையாடல் நடைபெற்றிருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சந்தேகத்தின் பேரில் முகாமையாளரிடம் விசாரிக்கப்பட்டபோது அவர் தனக்கும் அப்பாற் பட்ட விளைவு அது என்று தெரிவித்ததாகவும் விற்பனையாளர் தரத்தை உடைய மேற்படி நபருக்கு முகாமையாளர் பதவி வழங்கப் பட்டிருந்தது சம்பவத்தின் பின்பாகவே தெரிய வந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

விறகு காலையில் எஞ்சி இருக்கும் பொருள்கள் கையிருப்பு எடுக்கையிலேயே மேற்படி கையாடல் தெரிய வந்தது யாழ். பல நோ. கூட்டுறவுச் சங்க தலைவர் தலைமையிலான குழு விசாரணையை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. (21)

## க.பொ.த.(உயர்தரம்) புள்ளிகள் விரைவில்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த.(உயர் தரம்)பரீட்சையின் பெறுபேறுகளுக்குரிய புள்ளிகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படவிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் கூறியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் இவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும்,பல்கலைக்கழக பேராசிரியர்கள் நிர்வாக கடமையை புறக்கணிப்பதால் இந்த நடைமுறை தாமதமடையலாம்என வும் மேலும் தெரியவருகின்றது.

---

குறிப்பிடத்தக்கது.

பெயர்ந்திருப்பது தெரிந்ததே

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 70,000 தமிழர் அகதிகளாகினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 16913 குடும்பங்களைச்சேர்ந்த 69 467 பேர் அகதிகளாக வாழ்வதாகமாவட்டச் செயலகத்தின் நிலைபர அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இதில் 1832 குடும்பங்களைச் சேர்ந்த 7315 பேர் அகதிமுகாம்களிலும் 15081 குடும்பங்களைச் சேர்ந்த 62,152 பேர் இடம்பெயர்ந்து நண்பர்,உறவினர்வீடுகளிலும்தங்கியுள்ளனர்

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 13 அகதிமுகாம்கள் உள்ளன. இதில் 1058 குடும்பங்களைச் சேர்ந்த 3983 பேர் தங்கியுள்ளனர்.

## சிங்களமும், பௌத்தமும் இல்லாமற் போகும் ஆபத்து

### -கல்திஸ்ஸ தர்மபாலராமவிகாராதிபதி கவலை

சிங்களமும், பௌத்தமும் இல்லாமல் போகும் ஒரு யுகத்தில் வாழுகின்றோம். எனவே சிங்களத்தையும், பௌத்தத்தையும் உடனடியாக காப்பாற்ற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு கல்திஸ்ஸ தர்மபாலராம விகாராதிபதி கோடுகொட தம்மாவன்ச தேரோ பேராதனை பஞ்சாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் நடைபெறும் மாற்றங்களினால் சிங்களவர்கள் பலிக்கடாக்களாக மாறும் நிலை உருவாகியுள்ளது. விசேடமாக பௌத்த விகாரைகளை நாசம் செய்யப்படுவதற்கும் பௌத்த மதத்தை சீர்குலைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

---

# ராஜீவ் சிலை திறப்புக்கு அ. தி. மு. க. முட்டுக்கட்டை

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

(சென்னை)

சென்னையில் நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழா தொடர்பாக காங்கிரஸ் கட்சி செய்து வரும் ஏற்பாடுகளை அ. இ. அ. தி. மு. கவினர் திட்டமிட்டுசீர்குலைத்து வருவதாககாங்கிரஸ்கட்சிவட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், ஏனைய பிரமுகர்களும் விடுத்திருக்கும் அறிக்கைகளை மேற்கோள் காட்டியும், கட்சித் தொண்டர்களை அழைத்து வருவதற்காகப் பதிவுசெய்யப்பட்ட பேருந்து உரிமையாளர்கள் அவற்றை ரத்து செய்து வருவதை சுட்டிக்காட்டியும் காங்கிரஸ் கட்சியினால் இக்குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த விழாவை குழப்பும் நோக்கில் மாநில அரசு திட்டமிட்டுச் செயற்படுவதாகவும், விழா நடத்தவிருக்கும் இடத்திலேயே முதல்வர் ஜெயலலிதாவின் கட்அவுட்டுக்கள் வைக்கப்பட்டும், அ.இ. அ. தி. மு க கொடிகள் பறக்கவிடப்பட்டும் குழப்பம் ஏற்படுத்த தூண்டப்படுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் திருவாளர்கள் தண்டாயுதபாணிபொன்னுச்சாமிசுவாமிநாதன் மற்றும்நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயமோகன், கிருஷ்ணசுவாமி, டாக்டர் ராஜேஸ்வரன் ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர்.

## ஆட்சேர்ப்பு விளம்பரத்தில் 'ரத்தம் தோய்ந்த கால்'

''முன்னே செல்லும் உங்கள் கால்களில் இரத்தம் படிந்தால்தான் பின்னே வரும் உங்கள் கால்கள் சுதந்திரமாக நடமாடமுடியும் சுகமாக வாழும்''

''தாய் நாட்டைக் காக்கும் உன்னத பணியில் நாம் அனைவரும் ஒன்று சேர்வோம்''

''நாட்டிற்கு உன்னத பணி புரிந்து வீர புருசர்களாக எம்முடன் இணையுங்கள்''

இவை சிங்கள செய்திதாள்களில் சிறிலங்கா இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு விளம்பரங்களில் காணப்படும் வாசகங்கள் ஆகும் ஒவ்வொரு விளம்பரத்திலும் இவ் வாசகங்களுக்கு கீழ் ஒரு வர்ணப்படம் பிரசுரிக்கப் பட்டுள்ளது முதலாவது வாசகத்தின் கீழ் இராணுவச் சப்பாத்து அணிந்த இரு கால்கள் சற்று முன் பின்னாக காணப்படுகின்றன. முன் கால் சப்பாத்தில் இரத்தம் தோய்ந்தது போன்று சிவப்பு வர்ணத்தில் விளம்பரம் பிரசுரமாகியுள்ளது.

## ராஜீவ் சிலை திறப்புவிழாவில் ஜெயலலிதா பங்கேற்பார்

[சென்னை]

சென்னையில் வரும் திங்களன்று நடைபெறவிருக்கும் ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழாவில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கலந்துகொள்வார் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் பிரதமர் நரசிம்மராவின் அழைப்பின் பேரில் தமிழக முதல்வர் இவ் விழாவில் கலந்து கொள்ள இருப்பதாகவும், பிரதமர் நரசிம்மராவிற்கு முதல்வர் ஜெயலலிதா பகல் விருந்தளித்து கௌரவிக்க இருப்பதாவும் குறிப் பிடப்பட்டு உள்ளது.

## நால்வர் கைது

வேலூர் சிறையிலிருந்துதப்பியவர்கள் எனக் கூறப்படும் நான்கு இலங்கைத் தமிழர்கள் பம்பாயில்பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து போலியான கடவுச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

### யாழ். போதனா வைத்தியசாலையின்

# கொழும்புக் களஞ்சியத்தில் பெருமளவு மருந்து தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் கொழும்புக் களஞ்சியத்தில் பெருமளவு மருந்துப் பொருள்கள் தேங்கியிருப்பதாகவும் அவற்றை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர முடியுமானால் மருத்துத் தட்டுப்பாடு பெருமளவில் நீங்கிவிடும் எனவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கூட்டுப்படை தலைமை அலுவலகத்தின் அனுமதி கிடைக்காமையே இம்மருந்துப் பொருள்களை எடுத்துவர தடையாக அமைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

சுகாதார அமைச்சு தேவையான மருந்துப் பொருள்களை அனுமதித்துள்ளது எனவும் கூட்டுப்படை தலைமை அலுவலகம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்துப் பொருள்களில் 20 சதவீதமானவற்றையே அனுமதித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் பெருமளவு நோயாளர் சிகிச்சை பெறுவதால் மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## காணவில்லை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களில் 1088 பொலிசார் இதுவரை காணாமற் போயிருப்பதாகவும், 1990 ஜூன் மாதத்திற்கும் 1992 டிசம்பருக்கும் இடைப்பட்ட காலத்தில் இது நடைபெற்றிருப்பதாகவும் பொலிஸ் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வீரவேங்கை ஆரணி இறுதி அஞ்சலி நிகழ்வு

(கொடிகாமம்)

சென்ற புதன்கிழமை அன்று மணலாற்றில் சிறிலங்கா இராணுவ காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை ஆரணியின் (கந்தையா - பிரேமலதா) புகழுடல் நேற்று யா/கைதடி நவபுரம் அ. த. க. பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இம்மாவீரருக்கு பெருந்திரளான மாணவ, மாணவிகள் பொதுமக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பாடசாலையில் மகளிர் படைப்பிரிவின் தென்மராட்சி உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி சுவைதாவின் தலைமையில் அஞ்சலி உரை நடைபெற்றது. இங்கு மகளிர் படைப்பிரிவின் யாழ். மாவட்ட உதவி அரசியல் பொறுப்பாளர் செல்வி சுகுணா, சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். பின்பு இவரது புகழுடல் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. [86]

சமாதான

யாக்கப்பட்டிருக்கின்றது'' என அவர் மேலும் தெரிவித்தார்.

தொலைபேசிமூலம் லண்டனில் பதிவப்பட்ட அந்தச்செவ்வியில்,

'இதுகுறித்து நாங்கள் சர்வதேச அளவில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருப்பவர்களை அணுகிக்கொண்டிருக்கின்றோம். அதேவேளை சர்வதேச நிறுவனங்களையும், மனித உரிமை அமைப்புகளையும் இதுசம்பந்தமாக அணுகி வருகின்றோம்'

'இந்தச்சர்வதேச சமாதான முயற்சி தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத்தரும் என்றரீதியிலும் இந்திய அரசு சமாதானமுயற்சியை மேற்கொண்ட கிட்டுவுக்கோ அல்லது அவரது முயசிக்கோ எந்தவிதத் தீங்கும் விளைவிக்காமல் அவர் தலைமைப்பீடத்துக்குச் செல்கின்ற இலக்கைநோக்கிப் பிரயாணம் மேற்கொள்ள விடுமாறு கேட்டுக்கொள்கிறோம்' என்றும் கூறினார்.

அவர் சமாதானத் தூதுவராகச்சென்றுகொண்டிருக்கின்றார். அதுபற்றி — அவரது சமாதானமுயற்சிபற்றிஏதுவும் சொல்ல முடியுமா? என்ற கேள்விக்கு லோறன்ஸ் திலகர் பதிலளிக்கையில்,

'நிச்சயமாகப் பல்வேறு முயற்சிகள் அவர் ஐரோப்பாவில் இருந்தகாலத்தில மேற்கொள்ளப்பட்டன. அவர் பல்வேறு பல்தேசிய நிறுவனங்களைச் சந்தித்துள்ளார். அதேவேளை பல்வேறு நாட்டு அரசுகளுடனும் உரையாடியுள்ளார், அவ்வுரையாடல்களின் விளைவாகச் சமாதானத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி சிறிலங்கா அரசும், புலிகளும் ஐரோப்பிய நாடு ஒன்றில் சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பது என்ற திட்டம் உருவானது. அது குறித்து விடுதலைப் புலிகள் தலைமைப்பீடத்துடன் மிக விரிவாக, ஆழமாகக் கதைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்படியானசந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்தினர் வெளியில் வரமுடியாத நிலையில் சமாதான முயற்சித் திட்டத்தை விரிவாக விளக்குவதற்காக அவர் ஒரு சமாதானத் தூதுவராகச் சென்றுகொண்டிருக்கும் வேளையில் தான் இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடந்துள்ளது என்றார்.

புலிகள்

ளதாக தெரிவிக்கப்படுகிறது அவர் மேலும் ''தீர்வு தமிழர்கள், மொழி, பண்பாடு, கௌரவம், பாதுகாப்பு என்பன உறுதி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் அதேவேளை வடக்கு-கிழக்கு. தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்பதை அரசாங்கம் ஏற்கவேண்டும் என்பதையே விடுதலைப்புலிகள் விரும்புகிறார்கள்'' என தெரிவித்துள்ளார்.

இதேவேளை ''அரசு மீண்டும் புலிகளுடன் பேசுவது, ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும்'' என கொழும்பிலுள்ள சில தமிழ்க்குழுக்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

''பாதுகாப்பு படையினரின் தாக்குதலினால் பலவீனப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் தம்மைத் திடப்படுத்தவே பேச்சுவார்த்தைக்கு முயல்கின்றனர்'' என புளொட்குழுவைச் சேர்ந்த சித்தார்த்தன் என்பவர் தெரிவித்தார்.

# மாணவர் சீருடை விநியோகம் இல்லை

இலவச சீருடைகள் விநியோகிக்கும் நிகழ்ச்சி வேலணைக் கோட்டத்தில் எதிர்வரும் திங்கட் கிழமை நடைபெறாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருக்கோணமலையில் இருந்து கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட இலவச சீருடைகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்க போதாமலுள்ளதாகவும் மறுதொகையும் கப்பல் மூலம் வந்தபின்னரே சகல கோட்டப்பாடசாலைகளுக்கும் விநியோகிக்ககூடியதாக இருக்கும் எனவும் யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு கல்வி உயர் கல்வி அமைச்சு தெரிவித்ததுபோன்றுவிநியோகிக்க முடியாமல் இருப்பதாகவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## கருத்தரங்கு

குடியியல் பாதிப்புற்றோர் புள்ளி விபரம் திரட்டுதலில் ஈடுபட்டுள்ள சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமிய புள்ளி விபர சேகரிப்பாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மைச் செயலகத்தில் நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

## அநுராதபுரத்திற்கு மாற்றம்

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு விட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

கிட்டுவை

மேலும் தெரிவிக்கிறார்.

அவர் தொடர்ந்து:-

''இட்டுவின் படகை வழிமறித்தது தற்செயலாக இடம் பெற்றிருக்கலாம், இந்தியக் கடலில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை எதிர்பார்த்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இந்தியக் கடற்படை தற்செயலாகக் கிட்டுவின் படகை வழிமறித்திருக்கலாம் என்றும்,

இப்பொழுது கடற்படையினர் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை எதிர்பார்த்திருக்கின்றனர். சமாதான முயற்சியில் சென்று கொண்டிருந்த கிட்டுவை வழிமறித்ததன் மூலம் அவர்கள் சிக்கலில் அகப்பட்

## தாதிப் பயிற்சி நெறி

## DIPLOMA IN NURSING

### 28-01-1993-ல் ஆரம்பமாகின்றன

1. தாதியர் பயிற்சிப் பாடத்திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி.
3. பதிவுபெற்ற தாதிய போதனாசிரியர்கள், உத்தியோகஸ்தர்களின் விரிவுரைகள்
4. உள் நாட்டு வெளிநாட்டுவேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒருவருடகாலப் பயிற்சி

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவச பயிற்சி.

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி**

(பதிவு பெற்றது)

இல: 10, பருத்தித்துறை வீதி,

யாழ்நகர்.

[சி/5789]

## பாவனையாளர்கள் நலன் கருதி

# கண்காணிப்பாளர்கள்

பாணின் நிறை, விலை, தரம் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை, பாவனையாளர்களின் நன்மை கருதி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இருந்து ஒருவரை நியமிக்க எமதுசங்கம் விரும்புகிறது. தன்னலமற்ற சேவையாற்ற விரும்பும சமூக சேவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு சங்கத்தின் அனுமதிப் பத்திரமும் வழங்கப்படும்.

ந. பாலவினாயகர்

யாழ். மாவட்ட பேக்கரி

உரிமையாளர் சங்கம்,

மணியம்ஸ் பில்டிங்,

ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(4011)

## மரண அறிவித்தல்

## கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை

மாற்று

# DIPLOMA IN NURSING

## 28-01-1993-ல் ஆரம்பமாகின்றன

1. தாதியர் பயிற்சிப் பாடத்திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது)
2. பிரபல வைத்தியசாலையில் இசய் முறைப் பயிற்சி.
3. பதிவுபெற்ற தாதிய போதனாசிரியர்கள், உத்தியோகஸ்தர்களின் விரிவுரைகள்
4. உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒருவருடகாலப் பயிற்சி

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவச பயிற்சி.

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி**

(பதிவு பெற்றது)

இல: 10, பருத்தித்துறை வீதி,

யாழ்நகர்.

[சி/5789]

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் ஐயாத்துரை

தாவடி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் ஐயாத்துரை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும் தம்பு, கனகரத்தினம், தங்கம்மா, கற்பகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனபாலசிங்கம், இரத்தினசிங்கம், பரமானந்தம், நாகலட்சுமி, மீனலோசனி, குணசிங்கம் (A. G. எலெக்றிக்கல்ஸ், உரிமையாளர், யாழ்ப்பாணம்), திலகசிங்கம் (ஜேர்மனி), பாலசிங்கம் (இத்தாலி) சரோஜாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரத்தினம், இராசையா, சந்திரகிரிராஜா, தனவதி, ஈஸ்வரி, மதுராம்பிகை, லதா (ஜேர்மனி), சிவவருட்செல்வி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவரது இறுதிச் சடங்குகள் சனிக்கிழமை (16-1-93) இன்று பகல் 11 மணிக்கு இவரது தாவடி வடக்கு. இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

ஐ. குணசிங்கம்

[A. G. எலக்றிக்கல்ஸ் உரிமையாளர்

யாழ்ப்பாணம்]

(4012)

அஞ்சலியைச் செலுத்தினர். பாடசாலையின் மகளிர்

துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. [86]

# மாணவர் சீருடை விநியோகம் இல்லை

இலவச சீருடைகள் விநியோகிக்கும் நிகழ்ச்சி வேலணைக் கோட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருக்கோணமலையில் இருந்து கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட இலவச சீருடைகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விநியோகிக்க போதாமலுள்ளதாகவும் மறுதொகையும் கப்பல் மூலம் வந்தபின்னரே சகல கோட்டப்பாடசாலைகளுக்கும் விநியோகிக்ககூடியதாக இருக்கும் எனவும் யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு கல்வி உயர் கல்வி அமைச்சு தெரிவித்ததுபோன்று விநியோகிக்க முடியாமல் இருப்பதாகவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## கருத்தரங்கு

குடியியல் பாதிப்புற்றோர் புள்ளி விபரம் திரட்டுதலில் ஈடுபட்டுள்ள சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமிய புள்ளி விபர சேகரிப்பாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மைச் செயலகத்தில் நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்.

## அநுராதபுரத்திற்கு மாற்றம்

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு விட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

## செப்டீமியா

பாதிப்பதாகவும் இது குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

யாழ். வைத்தியசாலையில் நோயினால் மரணமானவர்களில் பெரும்பாலானோர் இந் நோயினாலேயே இறந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிட்டுவை

மேலும் தெரிவிக்கிறார்.

அவர் தொடர்ந்து:-

''கிட்டுவின் படகை வழிமறித்தது தற்செயலாக இடம் பெற்றிருக்கலாம், இந்தியக் கடலில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை எதிர்பார்த்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இந்தியக் கடற்படை தற்செயலாகக் கிட்டுவின் படகை வழிமறித்திருக்கலாம் என்றும்,

இப்பொழுது கடற்படையினர் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை எதிர்பார்த்திருக்கின்றனர். சமாதான முயற்சியில் சென்று கொண்டிருந்த கிட்டுவை வழிமறித்ததன் மூலம் அவர்கள் சிக்கலில் அகப்பட்டுள்ளார்கள். அதனால் தான் பாதுகாப்பு அமைச்சு அதன் முடிவை அறிவிக்கத் தாமதமாகிறது. இன்று ஒரு சாதகமான முடிவு வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம்'' என்றார்.

## ஐரோப்பிய

தவறான தகவல் வழங்கினார் என்பதை அடுத்துக் கடந்த பத்துவருடங்களாகப் பிரதமர் பதவியை வகித்துவரும் லேற்றர் பதவி விலக நேர்ந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# 7-ம் ஆண்டு நினைவலைகள் ...

வீரவேங்கை

## 2ம் லெப். பிலிப்ஸ்/பாப்பா

[கிருஷ்ணர் இரகுநாதன் - காங்கேசன்துறை]

வீரப்பிறப்பு: 21 - 09 - 1963

வீரச்சாவு: 16 - 01 - 1986

வீரமுடன் நடந்தாய்
விடுதலைப் பாதை தனில்
இன்று ஆயிரம் ஆயிரம் வேங்கைகள்
உன் பாதையில்
உன் இலட்சியம் நிறைவேறும்.

செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

அன்புத்தாய், சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்கள்.

(4014)

கள் விரும்புகிறார்கள்'' என தெரிவித்துள்ளார்.

இதேவேளை ''அரசு மீண்டும் புலிகளுடன் பேசுவது, ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும்'' என கொழும்பிலுள்ள சில தமிழ்க்குழுக்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

''பாதுகாப்பு படையினரின் தாக்குதலினால் பலவீனப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் தம்மை திடப்படுத்தவே பேச்சுவார்த்தைக்கு முயல்கின்றனர்'' என புளொட்குழுவைச் சேர்ந்த சித்தார்த்தன் என்பவர் தெரிவித்தார்.

குறித்து விடுதலைப் புலிகள் தலைமைப்பீடத்துடன் மிக விரிவாக, ஆழமாகக் கதைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்படியான சந்தர்ப்பத்தில், விடுதலைப் புலிகள் தலைமைப் பீடத்தினர் வெளியில் வரமுடியாத நிலையில் சமாதான முயற்சித் திட்டத்தை விரிவாக விளக்குவதற்காக அவர் ஒரு சமாதானத் தூதுவராகச் சென்றுகொண்டிருக்கும் வேளையில் தான் இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவம் நடந்துள்ளது என்றார்.

## பாவனையாளர்கள் நலன் கருதி
# கண்காணிப்பாளர்கள்

பாணின் நிறை, விலை, தரம் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை, பாவனையாளர்களின் நன்மை கருதி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இருந்து ஒருவரை நியமிக்க எமதுசங்கம் விரும்புகிறது. தன்னலமற்ற சேவையாற்ற விரும்பும சமூக சேவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கு ஊதியம் வழங்கப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு சங்கத்தின் அனுமதிப் பத்திரமும் வழங்கப்படும்.

ந. பாலவினாயகர்

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,

மணியம்ஸ் பில்டிங்,

ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(4011)

## கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி சபையின் பொதுக் கூட்டம் 17-01-1993 பி. ப. 2.30 மணிக்கு கொக்குவில் பொது நூலக மேல் மாடியில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சி. மாதவகுமாரன்

செயலாளர்

(4013)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 15.01.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8017

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

26-8936, 41-5605, 24-7941, 42-5080. 26-5517, 27-3910, 24-3178, 26-4376, 26-6335, 26-3118, 26-3998, 24-4560, 27-844, 28-8051, 28-0732, 40-1655.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-8427, 24-5734, 27-6821, 24-7623, 24-1989, 24-2680, 28-8951, 26-0355, 24-6842, 28-4550, 41-8292, 26-2827, 24-7744, 24-7375, 40-2394, 42-0962, 22-5857, 24-2359, 41-9167, 42-5603, 26-0691, 24-6628, 24-4917, 26-1609.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.